ஒன்றுக்கு மேற்பட்ட இலக்குகளை தாக்கிவிட்டு திரும்பும்

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அக்னி–5 ஏவுகணை சோதனை வெற்றி: விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு

புதுடெல்லி, மார்ச்.12– உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அக்னி–5 ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. இதற்காக விஞ்ஞானிகளை பிரதமர் மோடி பாராட்டி உள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள நவீன ஆயுதங்கள் மற்றும் தளவாடங்களை இந்தியா உருவாக்கி வருகிறது. ஏவுகணைகள், போர் விமானங்கள், விமானந்தாங்கி போர்க்கப்பல்கள் என முப்படைகளுக்கும் தேவையான ஆயுதங்களை இந்தியா தயாரித்து வருகிறது. இதில் ஏவுகணைகளை பொறுத்தவரை அக்னி வரிசை ஏவுகணைகளை இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன (டி.ஆர்.டி.ஓ.) விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர்.

இந்த ஏவுகணைகள் அக்னி–1 முதல் அக்னி–5 வரை திறன் அடிப்படையில் பிரிக்கப்பட்டு உள்ளன. இதில் அக்னி–1 முதல் அக்னி–4 வரையிலான ஏவுகணைகள் 700 கி.மீ. முதல் 3,500 கி.மீ. தூரம் வரை சென்று தாக்கும் திறன் வாய்ந்தவை ஆகும்.

இந்த வரிசையில் 5,000 கி.மீ. தூரம் வரை சென்று தாக்கவல்ல அக்னி–5 ஏவுகணை தயாரிக்கப்பட்டு உள்ளது. இந்த ஏவுகணை ஒன்றுக்கு மேற்பட்ட இலக்குகளை தாக்கி விட்டு மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே வந்து சேரும் (எம்.ஐ.ஆர்.வி.) வகையில் உருவாக்கப்பட்டு இருக்கிறது.

இந்த ஏவுகணை நேற்று சோதித்து பார்க்கப்பட்டது. மிஷன் திவ்யாஸ்திரா என்ற பெயரில் நடந்த இந்த சோதனை வெற்றிகரமாக நடந்தது. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அக்னி5 ஏவுகணை துல்லியமாக தாக்கியதாக டி.ஆர்.டி.ஓ. வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் மூலம் எம்.ஐ.ஆர்.வி. வகை ஏவுகணைகளை வைத்திருக்கும் மிகச்சில நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணைந்திருக்கிறது. இந்த திட்டத்தின் இயக்குனர் ஒரு பெண் விஞ்ஞானி என்பது கூடுதல் சிறப்பாக மாறியிருக்கிறது.

கண்டம் விட்டு கண்டம் தாக்கும் திறன் பெற்ற அக்னி–5 வரிசை ஏவுகணைகள் நாட்டின் நீண்ட தூர பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள உதவும். சீனாவின் வடக்கு எல்லைப்பகுதி உள்பட ஒட்டுமொத்த ஆசியாவையும், ஐரோப்பாவின் சில பகுதிகளையும் இந்த ஏவுகணையால் தாக்க முடியும். இந்த ஏவுகணை சோதனை வெற்றிகரமாக அமைந்திருப்பது குறித்து பிரதமர் மோடி மகிழ்ச்சி வெளியிட்டு உள்ளார். இந்த திட்டத்தில் பங்காற்றிய டி.ஆர்.டி.ஓ. விஞ்ஞானிகளை அவர் பாராட்டி உள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், 'உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அக்னி–5 ஏவுகணையின் முதல் சோதனையான 'மிஷன் திவ்யாஸ்திரா' வெற்றிக்காக நமது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன விஞ்ஞானிகளை நினைத்து பெருமிதம் கொள்கிறேன். இது ஒன்றுக்கு மேற்பட்ட இலக்குகளை தாக்கி விட்டு திரும்பும் எம்.ஐ.ஆர்.வி. தொழில்நுட்பம் கொண்டதாகும்' என குறிப்பிட்டு இருந்தார்.

நாடாளுமன்றத்தில் 4 ஆண்டுகளுக்கு முன்பு நிறைவேற்றப்பட்ட

குடியுரிமை திருத்த சட்டம் அமலுக்கு வந்தது: மத்திய அரசு விதிமுறைகளை வெளியிட்டது

புதுடெல்லி, மார்ச்.12

குடியுரிமை திருத்த சட்டத்தை அமல்படுத்துவதற்கான விதிமுறைகள் வெளியானதை தொடர்ந்து, அச்சட்டம் அமலுக்கு வந்துள்ளது.

கடந்த 1955ம் ஆண்டு குடியுரிமை சட்டம் கொண்டு வரப்பட்டது. அதில் திருத்தங்கள் செய்து, கடந்த 2019ம் ஆண்டு குடியுரிமை திருத்த மசோதாவை மத்திய அரசு கொண்டு வந்தது. இதன்படி, பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மதஅடக்குமுறைக்கு உள்ளாகி, அங்கிருந்து 2014ம் ஆண்டு டிசம்பர் 31ந் தேதிக்கு முன்பு இந்தியாவில் குடியேறிய இந்து, கிறிஸ்தவர், சீக்கியர், சமணர், பார்சிகள், பவுத்தர்கள் ஆகிய சிறுபான்மை யினருக்கு இந்திய குடியுரிமை வழங்க இம்மசோதா வகை செய்கிறது.

2019ம் ஆண்டு டிசம்பர் மாதம், இம்மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஜனாதிபதி ஒப்புதலையும் பெற்றது.

ஜனாதிபதி ஒப்புதல் பெற்று 6 மாதங்களுக்குள் சட்டத்துக்கான விதிமுறைகளை வெளியிட்டால்தான், அச்சட்டம் அமலுக்கு வரும். ஆனால், குடியுரிமைதிருத்தசட்டத்துக்குஎதிராக சில மாநிலங்களில் போராட்டங்கள் வெடித்தன. அவற்றில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியானார்கள். எனவே, விதிமுறைகள் வெளியிடப்படவில்லை. சட்டமும் அமல்படுத்தப்படவில்லை.

இதற்கிடையே, குடியுரிமை திருத்த சட்டத்தை அமல்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டிருப்பதாக கடந்த டிசம்பர் மாதம் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறினார். அதையடுத்து இதற்கான பணிகள் வேகம் எடுத்தன.

இந்நிலையில், குடியுரிமை திருத்த சட்டத்தை அமல்படுத்துவதற்கான விதிமுறைகள் நேற்று வெளியிடப்பட்டன. இத்துடன், அச்சட்டம் அமலுக்கு வந்து விட்டதாக மத்திய அரசு அறிவித்தது.

3 நாடுகளில் இருந்து வந்த மேற்கண்ட மதத்தினருக்கு இந்திய குடியுரிமை வழங்கும் பணியை மத்திய அரசு தொடங்கும். இதற்கென பிரத்யேக இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

எவ்வித ஆவணமும் இல்லாமல், 2014ம் ஆண்டு டிசம்பர் 31ந் தேதிக்கு முன்பு வந்தவர்கள் அதில் விண்ணப்பிக்க வேண்டும். எந்த ஆண்டு வந்தனர் என்பதை குறிப்பிட வேண்டும். அவர்களிடம் எந்த ஆவணமும் கேட்கப்படாது என்று மத்திய உள்துறை அமைச்சக செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 4 ஆண்டுகள் கழித்து, குடியுரிமை திருத்த சட்டம் அமலுக்கு வந்துள்ளது. நாடாளுமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு சில நாட்களே இருக்கும்போது அமல்படுத்தப்பட்டுள்ளது.

பா.ஜ.க. வாக்குறுதி நிறைவேற்றம்

இந்த சட்டம், கடந்த நாடாளுமன்ற தேர்தலிலும், மேற்கு வங்காள சட்டசபை தேர்தலிலும் பாரதீய ஜனதாவின் முக்கிய வாக்குறுதியாக இருந்தது குறிப்பிடத்தக்கது. மேற்கு வங்காளத்தில் கட்சியின் வளர்ச்சிக்கு இது உதவியதாக பாரதீய ஜனதா தலைவர்கள் கருதுகிறார்கள்.

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, ''சாதி, மதம், மொழியின் பெயரில் மக்களிடம் பிரிவினை ஏற்படுத்துவதை திரிணமூல் அனுமதிக்காது. சில நாட்களில் மத்திய அரசால் யாருக்கும் குடியுரிமை வழங்க முடியாது. இது தேர்தல் நாடகம்'' என்று தெரிவித்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ், ''தேர்தல் பத்திரங்கள் விவகாரத்தில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்ப இவ்வாறு செய்துள்ளனர்'' என்றார். கேரள முதல்வர் பினராயி விஜயன், ''கேரளாவில் குடியுரிமை சட்டத்தை அமல்படுத்த மாட்டோம்'' என்று தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படை கைது செய்த மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்

மத்திய அமைச்சருக்கு ஸ்டாலின் கடிதம்

சென்னை, மார்ச்.12–

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களின் மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த 22 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். மேலும், அவர்களின் மீன்பிடி படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களின் மீன்பிடி படகுகளையும் விடுவிக்க கோரி மத்திய வெளியுறவுத் துறை மந்திரி எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

இலங்கைக் கடற்படையினர் கடந்த 10ந்தேதி அன்று, 2 வெவ்வேறு சம்பவங்களில் 3 மீன்பிடி விசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர். மேலும், 22 மீனவர்களையும் கைது செய்துள்ளனர். இது நமது நாட்டு மீனவர்களின் நலனை பாதிக்கும் பெரும் கவலைக்குரிய சம்பவம். எனவே நீங்கள் (மத்திய வெளியுறவுத் துறை மந்திரி) இதில் உடனடியாக தலையிட வேண்டும்.

நமது மீனவர்கள் பல தலைமுறைகளாக நமது நாட்டிற்கு அருகே உள்ள கடற்பரப்பில் பாரம்பரியமாக மீன் பிடித்து வருகின்றனர். மீன்பிடித் தொழில் தான் அவர்களது வாழ்வாதாரமாக உள்ளது. சமீபகாலமாக அவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்படுவதும், கைது செய்யப்படுவதும் அவர்களது மீன்பிடிப் படகுகள் சிறைபிடிக்கப்படுவதும் அதிகரித்து வருகிறது. இது கவலை அளிக்கிறது.

இத்தகைய கைது நடவடிக்கைகள், பாதிக்கப்படும் மீனவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் பெரும் துயரத்தை ஏற்படுத்துகிறது. மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பெருமளவில் பாதிக்கிறது.

எனவே, உணர்வுப்பூர்வமான இந்தப் பிரச்சினையின் தன்மையைக் கருத்தில்கொண்டு, மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட விரைவாகவும், தீர்க்கமாகவும் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த கடிதத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

வீடுகளுக்கு மின்சார இணைப்பு பெறுவதற்கான விதிகளில் திருத்தம்: தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை, மார்ச்.12

வீடுகளுக்கு மின்சார இணைப்பு பெறுவதற்கான விதிகளில் திருத்தம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

ஒரே கட்டிடத்தில் 3 வீடுகள் இருந்தால் அதற்கு மின்சார இணைப்பு பெறுவதற்கு கட்டிட முடிவு சான்று மின்சார வாரியத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனால் அந்த உத்தரவில் தற்போது திருத்தம் செய்யப்பட்டு உள்ளது. அதன்படி கட்டிட முடிவு சான்று 3 வீடுகள் மற்றும் 750 சதுர மீட்டர் வரை உள்ள கட்டிடங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அது போல் கட்டிடத்தின் உயரம் 12 மீட்டர் முதல் 18.30 மீட்டர் உயரம் வரை உள்ள கட்டிடம் மற்றும் உயரம் இல்லாத கட்டிடம் எனவும், 18.30 மீட்டர் உயரத்திற்கு மேல் உயரமான கட்டிடங்கள் எனவும் 2 வகையான கட்டிடங்கள்மட்டுமே கட்ட முடியும். அதன்படி தற்போது 8 வீடுகள் வரை ஒரே கட்டிடத்தில் இருந்தாலும் அதற்கு பணி நிறைவு சான்று தேவை இல்லை. மேற்கண்ட கட்டிடங்களுக்கு கட்டிட நிறைவு சான்றிதழ் பெறுவதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

SHRIRAM Finance

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)

பொது அறிவிப்பு

இதன் மூலம் எங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், எங்களது **ஓட்டன்சத்திரம் கிளை,** இரண்டாவது தளம், கோபாலன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ், எச்டிஎப்சி வங்கி மாடியில், பழனி பிரதான சாலை, திண்டுக்கல், தமிழ்நாடு – 624 619 என்ற முகவரியிலிருந்து முதல் தளம், விவிகே காம்ப்ளக்ஸ், எண்.10259/11, சொசைட்டி காலனி, திண்டுக்கல் பிரதான சாலை, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், தமிழ்நாடு – 624 619 என்ற முகவரிக்கு 24 ஜூன், 2024 முதல் மாற்றப்படுகிறது.

வாடிக்கையாளர்கள் தங்களது தேவைகளுக்கு புதிய அலுவலக வளாகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பிராந்திய வர்த்தக தலைவர்

பொது நூலகங்களுக்கு நூல் கொள்முதல் செய்ய இணையதளம்: அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்

சென்னை, மார்ச்.12–

பொது நூலகங்களுக்கு வெளிப் படைத்தன்மையுடன் நூல் கொள்முதல் செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள இணையதளத்தை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

பள்ளிக்கல்வித்துறை, பொதுநூலக இயக்ககம் சார்பில் பொது நூலகங்களுக்குவெளிப்படைத்தன்மையுடன் நூல்கள் கொள்முதல் செய்வதற்கான இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் https://bookprocurement.tamilnadupubliclibraries.org/ என்ற இணையதள முகவரியில் தங்களைப் பதிவு செய்து கொண்டு பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்தை சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கிவைத்தார்.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இருந்து வாசகர்கள் புத்தகங்களை வீட்டுக்கு எடுத்து சென்று படித்துவிட்டு குறிப்பிட்ட நாட்களுக்கு பின்பு திரும்ப ஒப்படைக்கும் சேவை தொடங்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக சிறுவர் நூல்களும், தமிழ் நூல்களும் வீட்டுக்கு எடுத்து சென்று படிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த புதிய திட்டத்தையும் அமைச்சர் தொடங்கி வைத்தார்.

அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 2 மாவட்ட நூலக அலுவலர் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணையையும் அமைச்சர் வழங்கினார்.

விழாவில் பள்ளிக் கல்வித்துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், பொது நூலக இயக்குனர் இளம்பகவத், சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு தலைவர் மனுஷ்யபுத்திரன், இணை இயக்குனர் இளங்கோ சந்திரகுமார், அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் நூலகர்கள், வாசகர்கள், பதிப்பாளர்கள், வினியோகஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

'இன்சாட் 3 டி.எஸ்' செயற்கைகோள் எடுத்த புகைப்படங்கள்: இஸ்ரோ வெளியிட்டது

சென்னை, மார்ச்.12

வானிலை தரவுகளை துல்லியமாக அறிந்து கொள்வதற்காக விண்ணில் ஏவப்பட்ட 'இன்சாட் 3 டி.எஸ்' என்ற செயற்கைகோள் படங்களை எடுத்து அனுப்பி உள்ளது. அதனை இஸ்ரோ வெளியிட்டது.

இஸ்ரோ அதிநவீன கருவிகளுடன் பிரத்யேகமாக காலநிலை மற்றும் வானிலை தரவுகளை முன்கூட்டியே தெரிந்து கொள்வதற்காக 'இன்சாட் 3 டி.எஸ்' என்ற செயற்கைகோளை தயாரித்து, ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஜி.எஸ்.எல்.வி. எப்–14 ராக்கெட் மூலம் கடந்த மாதம் 17 ந்தேதி விண்ணில் ஏவியது. இந்த செயற்கைகோளில், 6 சேனல் இமேஜர் மற்றும் 19 சேனல் சவுண்டர் கருவிகள் வானிலை ஆய்வுகளுக்காகவும், உயர்தர தரவுகளை சேகரிப்பதற்காகவும், செயற்கைகோள் உதவி, தேடல் மற்றும் மீட்பு டிரான்ஸ்பாண்டர் அனுப்பப்பட்டது. அத்துடன் டேட்டா ரிலே டிரான்ஸ்பாண்டர் (டி.ஆர்.பி.) போன்ற வித்தியாச தகவல் தரும் கருவிகளும் இடம்பெற்றிருந்தது. இந்த கருவி தானியங்கி தரவு சேகரிப்பு தளங்கள் மற்றும் தானியங்கி வானிலை நிலையங்களிலிருந்து தரவுகளை அளிக்கும். அத்துடன் நிலம் மற்றும் கடல் பரப்புகளை கண்காணிக்கும் வகையில் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன.

இதுபற்றி இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியதாவது:– இன்சாட்– 3டி. எஸ் வானிலை செயற்கைக்கோள், புவி இமேஜிங் செயல்பாடுகளைத் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. வானிலை பேலோடுகளின் முதல் தொகுப்பு படங்களை (6 சேனல் இமேஜர் மற்றும் 19 சேனல் சவுண்டர்) கடந்த 7ந்தேதி எடுத்து அனுப்பியது. இந்த செயற்கைகோளில் உள்ள அனைத்து கருவிகளும் செயல்பட தொடங்கி உள்ளது. குறிப்பாக இதில் உள்ள 6 சேனல் இமேஜர் கருவி பல நிறமாலை சேனல்கள் அல்லது அலைநீளங்களில் பூமியின் மேற்பரப்பு மற்றும் வளிமண்டலத்தின் படங்களைப் எடுத்து அனுப்பி உள்ளது. மேகங்கள், ஏரோசல்கள், நில மேற்பரப்பு வெப்பநிலை மற்றும் நீராவி வினியோகம் போன்ற பல்வேறு வளிமண்டல மற்றும் மேற்பரப்பு நிகழ்வுகள் பற்றிய தகவல்களை சேகரித்து உள்ளது.

19 சேனல் ஒலிப்பான் பூமியின் வளிமண்டலத்தால் வெளிப்படும் கதிர்வீச்சைக் கவனமாகப் பிடிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட சேனல்கள் மூலம் வெவ்வேறு வளிமண்டலக் கூறுகள் மற்றும் நீராவி, ஓசோன், கார்பன் டை ஆக்சைடு மற்றும் பிற வாயுக்கள் போன்ற பண்புகளால் வெளிப்படும் கதிர்வீச்சை படம் எடுத்து அனுப்பி உள்ளது. அந்த புகைப்படங்கள் நேற்று வெளியிடப்பட்டது.

இதில் உள்ள கருவிகள் கடல் மேற்பரப்பு வெப்பநிலை, மழைப்பொழிவு, நில மேற்பரப்பு வெப்பநிலை, மூடுபனி தீவிரம், வெளிச்செல்லும் நீண்ட அலை கதிர்வீச்சு, மேல் வெப்பமண்டல காற்று, மேகக் காற்றழுத்தம், ஈரப்பதம் போன்ற 40க்கும் மேற்பட்ட புவி இயற்பியல் தரவு தயாரிப்புகளை உருவாக்குகின்றன. சேகரிக்கப்பட்ட தரவு வளிமண்டலத்தின் செங்குத்து அமைப்பு பற்றிய தகவல்களை அளிக்கிறது. வானிலை முன்னறிவிப்பு, காலநிலை கண்காணிப்பு மற்றும் வளிமண்டல செயல்முறைகளைப் புரிந்துகொள்வதற்கு உதவும்.

இவ்வாறு விஞ்ஞானிகள் கூறினர்.

பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: 3வது தளம், பஞ்ச்ஷில் டெக் பார்க், விமான் நகர், புனே 411014, மகாராஷ்டிரா.
கிளை அலுவலகம்: பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட், 3வது தளம், யூனிட் எண். 804,805,806, டெல்டா விங், ரஹேஜா டவர்ஸ், அண்ணாசாலை, சென்னை 600002
அங்கீகரிக்கப்பட்ட அலுவலக விவரங்கள்: வரதராஜ் M, மின்னஞ்சல் முகவரி : varadaraj.m@bajajfinserv.in, மொபைல் எண். 9940155459/8669189048

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் கீழ் ('சட்டம்')
அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்னணு ஏலத்திற்கான பொது அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/உடன் கடன்தாரர் பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்('BFL')க்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தை அடமானம் வைத்துள்ளார் என்று இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. SARFAESI சட்டம் 2002 மற்றும் அங்குள்ள விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் மேற்கூறிய அசையா சொத்து ('பாதுகாக்கப்பட்ட சொத்து/சொத்து') கையகப்படுத்தப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி BFLக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை, பொருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை பெறுவதற்காக பாதுகாக்கப்பட்ட சொத்து பொது ஏலத்தின் மூலம் விற்கப்படும். கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், விதி எண் 8 மற்றும் 9ன் கீழ் (இனிமேல் விதிகள் என குறிப்பிடப்படுகிறது) பாதுகாக்கப்பட்ட சொத்து விற்பனை மற்றும் 'எங்கே இருக்கிறதோ அதுபோல்', 'எதுவாக இருந்தாலும்', 'எப்படி இருந்தாலும்' மற்றும் 'ஆதாரம் இல்லாத' அடிப்படையில்'' 17/04/2024 அன்று ஏலம் நடைபெறும். மற்றும் அதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

கடன் கணக்கு விவரங்கள்/ கடன்தாரர்/கள் & உத்தரவாத தாரர்கள் பெயர் மற்றும் முகவரி	1. மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம் 2. EMD ஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 3. சொத்தை பார்வையிடுவதற்கான தேதி மற்றும் நேரம்	1 ரிசர்வ் விலை 2 சொத்துக்கான EMD 3 ஏல அதிகரிப்பு
LAN No. 403SHL26804144 மற்றும் 403SHL26804875 **1. கிரிஸ்டோபர் சுசில் ராஜ் எஸ் (கடன்தாரர்)** எண்.70, இபி காலனி, உதயம் நகர், வேளச்சேரி, வேளச்சேரி – ஜிகூமா பள்ளி அருகில், சென்னை – 600 042. 05.03.2024 அன்று மொத்த நிலுவைத் தொகை : ரூ.83,70,093/- (ரூபாய் எண்பத்து மூன்று லட்சத்து எழுபதாயிரத்து தொன்னூற்று மூன்று மட்டும்) மற்றும் எதிர்கால வட்டி. மற்றும் சேர்ந்துள்ள கட்டணம்	1. மின்னணு ஏலத் தேதி 17.04.2024 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை, 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் 2. கேஒய்சி உடன் EMD ஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 16.04.2024 அன்று மாலை 5.00 மணி வரை (இந்திய நேரப்படி) 3. சொத்தை பார்வையிடுவதற்கான தேதி 13.03.2024 முதல் 15.04.2024 வரை காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை (இந்திய நேரப்படி)	ரிசர்வ் விலை : ரூ.45,00,000/- (ரூபாய் நாற்பத்தைந்து லட்சம் மட்டும்) EMD : ரூ.4,50,000/- (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்.) ரிசர்வ் விலையில் 10% ஏல அதிகரிப்பு ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் அதன் மடங்குகளில்

அசையா சொத்து குறித்த விவரம்: விவசாய நிலம் அல்லாத சொத்து மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்: டுப்ளக்ஸ் வீடு எண்.2, கீழ்தளம் மற்றும் இரண்டாம் தளம். 1250 சதுர அடி. மொத்தம் 2400 சதுர அடி நிலத்திலி தெற்குப் பக்கத்தில் உள்ள 1200 சதுர அடி நிலத்திலி பிரிவுபடாத பங்கு நிலம் 600 சதுர அடியை (பொதுப்புகுதி மற்றும் கார் பார்க்கிங்கை உள்ளடக்கி உள்ளது), சர்வே எண்.370/9ஏ மற்றும் 370/9பி. உப பிரிவு சர்வே எண்.370/24, வேங்கைகாசல் கிராமம், மனை எண்.3, வேங்கைகாசல், சோழிங்கநல்லூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. அதன் எல்லைகள் : வடக்கு : மன.ஈ எண்.3 (பகுதி), தெற்கு : 20 அடி சாலை, கிழக்கு: 24 அடி சாலை, மேற்கு: மனை எண்.4

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:

* பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு தற்போதைய அல்லது எதிர்கால வில்லங்கங்களை அறிந்தோ அறியாமலோ "எங்கே இருக்கிறதோ அதுபோல்", "எதுவாக இருந்தாலும்","எப்படி இருந்தாலும்" மற்றும் "ஆதாரம் இல்லாத" அடிப்படையில் பொது ஏலம் நடத்தப்படுகிறது. * குறைந்தபட்ச விலைக்கு கீழே பாதுகாக்கப்பட்ட சொத்து விற்கப்படாது. * ஏல விற்பனை இணைய ஏல போர்ட்டல் மூலம் ஆன்லைனில் இருக்கும். * மின்னணு ஏலம் https://bankauctions.inல் 17 ஏப்ரல் 2024 அன்று காலை 11:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை ஒவ்வொன்றும் 5 நிமிடங்களுக்கு வரம்பற்ற நீட்டிப்புடன் நடைபெறும். * விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு நிறுவனத்தின் இணையதள URL https://cms-assets.bajajfinserv.in/is/content/bajajfinance/christopher-susilraj-auction-website-noticepdf?scl=1&fmt=pdfஐப் பார்க்கவும் அல்லது எந்தவொரு தெளிவுபடுத்தலுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தேதி: 12.03.2024 ஒப்பம்/- வரதராஜ் M,
இடம்: சென்னை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்

SHRIRAM Finance

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்)

பொது அறிவிப்பு

இதன் மூலம் எங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், எங்களது **மட்டக்கடை கிளை,** எண்.7S/6A, முதல் தளம் ஓஎம்எம் காம்ப்ளக்ஸ், சேதுபாதை பிரதான சாலை, கிருஷ்ணராஜபுரம் I, சத்யா தியேட்டர் எதிரில், தூத்துக்குடி, தமிழ்நாடு – 628 002 என்ற முகவரியிலிருந்து முதல் தளம், 47A, கடற்கரை சாலை, தூத்துக்குடி, தமிழ்நாடு – 628 001 என்ற முகவரிக்கு 24 ஜூன், 2024 முதல் மாற்றப் படுகிறது.

வாடிக்கையாளர்கள் தங்களது தேவைகளுக்கு புதிய அலுவலக வளாகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பிராந்திய வர்த்தக தலைவர்

IndiaShelter Home Loans

இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம்: மனை–15, வேது மாடி, செக்டர்–44, இன்ஸ்டியூயூஷனல் ஏரியா, குர்கான், ஹரியானா–122002 கிளை அலுவலகம்: இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், கதவு எண்.11, வணிக அலுவலக எண்.2, வ.உ.சி. தெரு, சிவன் கோவில் எதிரில், செங்கல்பட்டு – 603 002.

அசையா சொத்துக்கான சுவாதீன அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ள இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(2) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2வது விதிமுறைக்கு ஏற்ப கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர் மற்றும் சொத்தின் உரிமையாளர்/உத்தரவாதாரர் ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்ட